# 10-11-2024 செய்தி

## அந்நியச் செலாவணி கையிருப்பு 68,213 கோடி டாலராக சரிவு

- அந்நியச் செலாவணி கையிருப்பு தொடர்ந்து அதிகரித்து வந்தாலும், உலகளாவிய பொருளாதாரச் சூழல்களால் ஏற்படும் அழுத்தங்களுக்கு இடையே ரூபாய் மதிப்பைப் பாதுகாப்பதற்காக அந்நியச் செலாவணி கையிருப்பை ரிசர்வ் வங்கி பயன்படுத்துவதால் அது அவ்வப்போது குறைகிறது.
- நவம்பர் 1-ஆம் தேதியுடன் நிறைவடைந்த மதிப்பீட்டு வாரத்தில், அந்நியச் செலாவணி கையிருப்பின் முக்கிய அங்கமான அந்நிய நாணய சொத்துகள் 390.2 கோடி டாலர் குறைந்து 58,984.9 கோடி டாலராக உள்ளது.
- டாலர் அல்லாத யூரோ, யென் போன்ற பிற செலாவணிகளின், கையிருப்பில் ஏற்படும் ஏற்ற, இறக்கங்கள் டாலர் மதிப்பில் கணக்கிடப்படுவது அந்நிய நாணய சொத்துகள் ஆகும்.
- மதிப்பீட்டு வாரத்தில் இந்தியாவின் தங்கம் கையிருப்பு 122.4 கோடி டாலர் அதிகரித்து 6.9751 கோடி டாலராக உள்ளது.
- சிறப்பு வரைதல் உரிமைகள் (எஸ்டி ஆர்) 10 லட்சம் டாலர் குறைந்து 1,821.9 கோடி டாலராக உள்ளது.
- மதிப்பீட்டு வாரத்தில் சர்வதேச நிதியத்தில் இந்தியாவின் கையிருப்பு 40 லட்சம் டாலர் அதிகரித்து 431.1 கோடி டாலராக உள்ளது என்று ரிசர்வ் வங்கியின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

## தேசிய சட்ட உதவி ஆணைய செயல் தலைவர் நீதிபதி பி.ஆர்.கலாய்

- தேசிய சட்ட உதவி ஆணையத்தின் புரவலர்- தலைவர் பதவிக்கு உச்சநீதியை தலைமை நீதிபதி உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு அடுத்து உள்ள மூத்த நீதிபதி நியமிக்கப்படுவார்.
- அதன்படி, தற்போது அதன் புரவலர் -தலைவராக தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் இருக்கிறார். செயல் தலைவராக நீதிபதி சஞ்சீவ் கன்னா உள்ளார்.
- தற்போது, தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் முறைப்படி பணி ஓய்வுபெறும் நிலையில் உச்சநீதிமன்ற அடுத்த தலைமை நீதிபதியாக பதவியேற்கும் சஞ்சீவ் கன்னா, தேசிய சட்ட உதவி ஆணையத்தின் புரவலர் - தலைவர் பதவியை வகிப்பார். இவருக்கு அடுத்து மூத்த நீதிபதியாக இருக்கும் பி.ஆர்.கவாய், செயல் தலைவர் பதவியை வகிப்பார்.

## மத்திய அரசுத் திட்டங்களின் கீழ் அதிக கடனுதவி

- பிரதமரின் முத்ரா திட்டம், விஸ்வகர்மா திட்டம் போன்ற மத்திய அரசுத் திட்டங்களின் கீழ் கடனுதவிகள் வழங்குவதை பிராந்திய ஊரக வங்கிகள் அதிகப்படுத்த வேண்டும்.
- பால்பண்ணை, கால்நடை, மீன்வளம் போன்ற வேளாண்சார் தொழில்களை இலக்காக வைத்துக்கொண்டு வேளாண் கடனுதவிகளை அதிக அளவில் வழங்க வேண்டும்.
- அது, அந்தந்தப் பகுதியில் வேளாண் நடவடிக்கைகளை ஊக்குவிக்க உதவியாக இருக்கும்.
- கேரளத்தில் மீன்வளர்தொழில், தெலுங்கானாவில் பால்பண்ணை தொழில்களுக்கு அதிக கடனுதவிகளை அளிக்க மாநில அரசுகளுடன் இணைந்து செயலாற்ற வேண்டும்.
- தென்னிந்தியாவில் செயல்பட்டு வரும் பிராந்திய ஊரக வங்கிகள் ரூ.3,816 கோடி லாபத்தை ஈட்டியுள்ளன.
- இது நாட்டில் உள்ள அனைத்து பிராந்திய ஊரக வங்கிகளின் மொத்த வளர்ச்சியைக் காட்டிலும் 50 சதவீதம் கூடுதலாகும்.
- நடப்புக் கணக்கு, சேமிப்புக் கணக்கு வைப்பு நிதிகளை ஊக்குவிப்பது மிகமிக முக்கியமாகும்.
- அப்போது கடன் வழங்கும் வளர்ச்சி நிலையானதாக இருக்கும்.
- அனைவரையும் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும் பிரதமரின் ஜீவன் ஜோதி பிமா திட்டம், பிரதமரின் சுரக்ஷா பிமா திட்டம், அடல் ஓய்வூதியத் திட்டம் போன்ற திட்டங்களை அதிவேகமாக செயல்படுத்த பிராந்திய ஊரக வங்கிகள் முன்வர வேண்டும்.
- ஜன்தன் திட்டத்தில் தொடங்கப்பட்டு, செயல்படாமல் இருக்கும் வங்கிக் கணக்குகளை மீண்டும் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- குறு,சிறு நடுத்தரத் தொழில்களுக்கு தங்குதடையில்லாமல் கடனுதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- குறு,சிறு, நடுத்தரத் தொழில்களில் ஈடுபட்டுள்ள வாடிக்கையாளர்களுக்கு பொருந்தும் வகையில் கடன் திட்டங்களை வகுக்க வேண்டும்.
- மத்திய அரசின் குறு,சிறு, நடுத்தரத் தொழில் கடனுதவி திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.
- வாடிக்கையாளரை மையப்படுத்திய நுண் ஏடீஎம்கள், அழைப்பு மையங்கள், இணையவங்கி, காணொலி கே.ஒய்.சி, ஆர்.டி.ஜி.எஸ். ஐ.எம்.பி.எஸ். போன்ற பல்வேறு தொழில்நுட்பங்களை செயல்பாட்டுக்கு கொண்டுவரும் திட்டங்களை பிராந்திய ஊரக வங்கிகள் சிறப்பாக செயல்படுத்தியுள்ளது வரவேற்கத்தக்கது.
- ஒரு மாநிலம், ஒரு பிராந்திய ஊரக வங்கி என்ற திட்டம் குறித்து மாநில அரசுகளின் கருத்தைக் கேட்டிருக்கிறோம் என்றார்.